தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில்

நங்கநல்லூர், சென்னை - 600 061

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு

**நாள். 18.12.2025 வியாழக்கிழமை**

சென்னை - 600 061, நங்கநல்லூர், அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் கீழ்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு பணியாளர்களை நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தினை சார்ந்த நபர்களிடமிருந்து **20.01.2026**-ம் தேதி செவ்வாய்கிழமை மாலை **5.45** மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் திருக்கோயில் அலுவலகத்திற்கு நேரில் வந்து தெரிந்துகொள்ளலாம்.

### காலிப்பணியிட விவரம்

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட பணியிட விவரம் | பணியிடங்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ஊதிய ஏற்ற முறை) | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | தட்டச்சர் | 1 | Paymatrix-15<br>15300-48700 | 1. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான தகுதி<br>2. தட்டச்சில் அரசு தொழில்நுட்ப தேர்வில் தேர்ச்சி<br>(i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை (அல்லது)<br>(ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது)<br>(iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை<br>3. கணினி பயன்பாடு மற்றும் அலுவலகத் தானியக்கத்தில் சான்றிதழ் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட இணையான தகுதி. |
| 2 | பிளம்பர் | 1 | Paymatrix-13<br>12600-39900 | பிளம்பர் பாடப் பிரிவில் அரசு / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் வழங்கிய தொழிற் பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 3 | அலுவலக உதவியாளர் | 1 | Paymatrix-13<br>12600-39900 | எட்டாம் வகுப்பில் தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான தகுதி |
| 4 | மின்பணியாளர் | 1 | Paymatrix-13<br>12600-39900 | 1 அரசு /அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் மின்சார வாரிய தொழில்துறை பயிற்சி (ITI) பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2 மின்சார உரிம வாரியத்தால் வழங்கப்பட்ட B சான்றிதழ் பெற்றவராக இருக்க வேண்டும் |

குறிப்பு (1) விண்ணப்பதாரர் **01.07.2025** அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், **45** வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். (2) தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்ப படிவம் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், இந்து சமய அறநிலையத்துறை **www.tnhrce.gov.in** என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

**அ. குமரேசன்**
செயல் அலுவலர்

செ.ம.தொ.இ / / வரைகலை / 2025

**எம். கோதண்டராமன்**
தக்கார்

# பணிக்கான விண்ணப்பம்

புகைப்படம்

விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயர் :

1. பெயர் :
2. தந்தையின் பெயர் :
3. நிரந்தர முகவரி :
4. கைப்பேசி எண். :
5. சமயம் :
5. மதம் (சாதி மதச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
6. பிறந்த தேதி மற்றும் வயது :
7. கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)
8. மேற்படி பணிக்கான முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் :
9. நன்னடத்தை சான்று : (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து)
10. மருத்துவ சான்று : (நகல் இணைக்கப்பட வேண்டும்)
11. பொது :

## சான்றிதழ்

மேலே கூறப்பட்ட வரிசை எண்.1 முதல் 10 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் நான் இந்துமதத்தைச் சார்ந்தவன்என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

நாள் :

இடம் : விண்ணப்பதாரின் கையொப்பம்

**<u>இணைப்புகள்</u>**

1. கல்வித் தகுதி சான்றின் நகல்கள்(TC & Marks list)
2. சாதிச் சான்று நகல் (வட்டாட்சியரால்வழங்கப்பட்டது)
3. குடும்ப அடையாள அட்டைநகல்
4. முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate)
5. ஆதார் அட்டை நகல்
6. வேலைவாய்ப்பு பதிவு அட்டை நகல்
7. சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலையுடன் கூடிய உறை

# நிபந்தனைகள்

1. அரசாணை எண்.114, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 03.09.2020ன் படி இந்து சமய நிறுவனங்களின் (பணியாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட) பணிவிதிகளின்படி இப்பணி நியமனம் செய்யப்படும்.

2. விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர்களுக்கு தமிழில் நன்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும், இந்து மதத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும், இறை நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித் தனியாக குறிப்பிடப்பட்டு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

5. தொற்று நோய் மற்றும் உடல் அல்லது மனநிலை குறைபாடுகள் மற்றும் கண் குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

6. கிரிமினல் நீதிமன்றத்தின் மூலம் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப் பணியிலிருந்தும் பொது ஸ்தாபனங்களில் இருந்தும் இதர திருக்கோயில்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், இத்திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

7. திருக்கோயில் மூலம் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். செயல் அலுவலர், அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில், நங்கநல்லூர், சென்னை-61. என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை www.tnhrce.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விவரங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் வந்து கேட்டு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

8. தட்டச்சர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட இருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை (அல்லது) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது)ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை, மற்றும் கணினி பயன்பாடு மற்றும் தானியக்கத்தில் சான்றிதழ் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட இணையான தகுதி பெற்று இருக்க வேண்டும்.

9. பிளம்பர் பாடப் பரிவில் அரசு / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் வழங்கிய தொழிற் பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

10. அலுவலக உதவியாளர் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான தகுதி

11. மின் பணியாளர்பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் அரசு / அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் மின்சாரவாரிய தொழில்துறை பயிற்சி (ITI) பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் மின்சார உரிம வாரியத்தால் வழங்கப்பட்ட 'B' சான்றிதழ் பெற்றவராக இருக்க வேண்டும்.

11. நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயர் அலுவலகர்களிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

12. திருக்கோயில் பணியில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

13. விண்ணப்பம் அனுப்பப்படும் மேல் உறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

14. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதி உள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

15. நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

16. நேர்முக தேர்வானது அதற்குண்டான குழுவினரின் முடிவுக்கும் இத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டதாகும்.

17. விண்ணப்பதாரர் நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும். மருத்துவ தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்

18. இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் 20.01.2026 செவ்வாய்கிழமை மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் மாதிரி படிவத்தில் கண்டுள்ளவாறு தேவையான விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும், மாதிரி படிவத்தின்படி இல்லாமல், வேறு வகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

19. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்து சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட (Xerox) புகைப்பட நகல்களாக இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்பக்கூடாது.

20. நேர்முகத் தேர்விற்கு அழைப்பு அனுப்பப்படும் விண்ணப்பதாரர் மட்டுமே அசல் சான்றிதழ்களை எடுத்து வர வேண்டும்.

21. காலிப்பணியிடங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்திருந்தாலும், இவ்விளம்பரத்திற்கு பின்னர் புதியதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

22. இதர ஏதேனும் விவரங்கள் தேவைப்படின் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

23. மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலில் காலகாலமாக பின்பற்றி பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

24. இணைக்கப்பட வேண்டிய சான்றுகளின் சான்றிடப்பட்ட நகல்கள்.

    1. வயது
    2. கல்வித் தகுதி
    3. சாதி சான்றிதழ்
    4. சிறப்பு தகுதி சான்றிதழ்
    5. முன் அனுபவம் சான்றிதழ் (ஏதேனும் இருப்பின்)
    6. நன்னடத்தை சான்று அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரிடமிருந்து 20.01.2026க்கு பின்பு பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
    7. ஆதார் அட்டை
    8. இருப்பிட சான்று

25. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேரும் முன் உடற்தகுதிசான்று அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து ஆவணங்களையும் அரசு பதிவு பெற்ற அலுவலர் (Gazetted Officer)-யிடம் ஒப்பம் பெற்று சமர்ப்பிக்கவும், அசல் ஆவணம் ஏதும் இணைக்க வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

26. இதர நிபந்தனைகள் திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் கேட்டு பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு,

**அ.குமரேசன்**
செயல் அலுவலர்

**எம்.கோதண்டராமன்**
தக்கார்